(ஈ) நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கக் கூடாது என்று தான் இருந்தேன். ஆனால் 'ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸை'ப் பார்க்கும்போது இதை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏற்கனவே அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்கள் என்று வாக்குறுதி தந்தார்கள். ஆனால் இந்தச் சட்ட முன் வடிவில் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை ; விடப்பட்டிருக்கிறது. அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் ? ஏன் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் ? அவர்களையும் இதிலே சேர்த்திருந்தால் நான் இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்றிருப்பேன். பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் இடம் பெறாததால் நான் இந்தச் சட்ட முன் வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராண்மைச் சட்டங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.